1973 நவம்பர் 19]

பள்ளிகளுக்கு விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள்

*154 வினா—திரு. பெ. செளந்தரபாண்டியன்
திரு. ஆ. பரந்தாமன் மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வானில் அமைக்கப்பட்டுள்ள பரிசோதனைக் கூடங்களை அறிவியல் பரிசோதனைக் கூடம் இல்லாத பள்ளிகளுக்கு அனுப்பி வைத்து வசதி செய்து தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்தெந்தக் கல்வி மாவட்டங்களில் அவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சென்னை, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

*155 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், அய்யன்காளி பாளையம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை போதிய அளவு இல்லாததால் இச்செயற்குறிப்பைப் பரிசிலிக்க இயலவில்லை.

*156 வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம், தாணிப்பாடியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக் கூடம் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒவ்வோராண்டும் இத் திட்டத்தின் கீழ் 60 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இப்பள்ளியின் தேவையும் உரிய காலத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : விஞ்ஞானக் கூடங்கள் ஆரம்பிக்க, தனியார் பள்ளி களில் இருந்து எவ்வளவு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனியார் பள்ளிகளில் இருந்தும் விண்ணப்பங்கள் வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 60 பள்ளிகள் தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஆயிரத்து ஐநூறு பிள்ளைகளுக்கு மேற்பட்ட பள்ளிகளாக எடுத்து வருகிறோம். 500-க்கும் அதிக மான மாணவர்கள் உள்ள பள்ளிக்கூடங்கள் அரசாங்கப் பள்ளியாக தேர்ந் தெடுக்கப்பட்டும் வருகின்றன.

புதுக்கோட்டை மாதிரிப்பள்ளிக்குக் கட்டடங்கள்

*157 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் இயங்கி வருகின்ற மாதிரிப் பள்ளிக்கு புதிய கட்டடமும், ஹாஸ்டலும் கட்டிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ரூ. 22.70 லட்சம் மொத்தச் செலவில் ஓர் பள்ளிக் கட்டிடமும் ஓர் மாணவர் விடுதியும் கட்டுவிப்பது பற்றிய முதன்மைப் பொறியாளரின் கருத்து பள்ளிக் கல்வி இயக்குநரின் ஆய்வில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : அந்த வேலை எப்போது துவங்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கான இடவசதி தேவைப் படுகிற புதுக்கோட்டையில் இருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் வன இலாக்கா வுக்குச் சொந்தமான 30 ஏக்கரா நிலம் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த நிலம் வன இலாக்காவின் அனுமதியுடன் கிடைத்துவிட்டால் மாதிரிப் பள்ளிக் கட்டிடம் 10 லட்சத்து 80 ஆயிரத்திலும், மாணவர்கள் விடுதி 11 லட்சத்து 90 ஆயிரத்திலும் கட்ட நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியில் 250 மாணவர்கள் பயில வசதி உண்டு. அந்த 250 மாணவர்களுக்குமே விடுதியில் தங்க இடம் தரப்பட்டிருக்கிறது.